சுருக்கம்

உயர்கல்வி – 2010–2011–ஆம் கல்வியாண்டு முதல் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் தொழிற்கல்லூரிகளில் ஒற்றைச் சாளர கலந்தாய்வின் மூலம் சேர்க்கை பெறும் முதல் பட்டதாரி மாணவர்கள் – கல்விக் கட்டணச் சலுகை வழங்குதல் – நெறிமுறைகள் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

உயர்கல்வி (ஜே2) துறை

அரசாணை (நிலை) எண்.85

நாள் 16.4.2010.

சித்திரை 3 ,
திருவள்ளுவர் ஆண்டு 2041.

ஆணை

2010–ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் ஆறாம் நாள் அன்று சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரையில் கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

"அரசு மற்றும் தனியார் பொறியியல் கல்லூரிகளிலும், மருத்துவக் கல்லூரிகளிலும், பல் மருத்துவக் கல்லூரிகளிலும், வேளாண்மைக் கல்லூரிகளிலும், கால்நடை மருத்துவக் கல்லூரிகளிலும், சட்டக் கல்லூரிகளிலும் ஒற்றைச் சாளர முறையில் சேர்க்கை பெறும் மாணவர்களில் அவர்கள் குடும்பத்தில் இதுவரை யாரும் பட்டதாரிகளே இல்லையானால் அந்த மாணவர்கள் தொழிற்கல்வி படிப்பதை ஊக்குவிப்பதற்காக, சாதிப் பாகுபாடின்றியும் வருமானத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமலும் வரும் கல்வியாண்டு முதல் அவர்கள் செலுத்த வேண்டிய கல்விக் கட்டணம் முழுவதையும் அரசே ஏற்றுக் கொள்ளும்"

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்த முடிவு செய்த அரசு, 2010–2011–ஆம் கல்வியாண்டு முதல் இதுவரை பட்டதாரிகளே இல்லாத குடும்பத்திலிருந்து ஒற்றைச்சாளர முறையில் தொழிற்கல்வி பயில தேர்வுபெற்ற மாணவர்களுக்கு சாதிப் பாகுபாடின்றியும், வருமானத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமலும், அம்மாணவர்கள் செலுத்த வேண்டிய கல்விக் கட்டணம் (Tuition fee) முழுவதையும் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஏற்றுக் கொள்ள முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது:-

(1) 2010–2011–ஆம் கல்வியாண்டு முதல், பட்டதாரிகளே இல்லாத குடும்பத்தைச் சேர்ந்த தொழிற்கல்வி பயிலும் மாணவ / மாணவிகளின் கல்விக் கட்டணம் (Tuition fee)க்கான செலவை மட்டுமே அரசு ஏற்கும். (கல்விக் கட்டணம் என்பது, அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொழிற்கல்லூரிகளுக்கு அரசால் நிர்ணயிக்கப்படும் கட்டணத்தையும், சுயநிதி தொழிற்கல்லூரிகளுக்கு தனியார் சுயநிதி தொழிற்கல்லூரிகளில் கட்டண நிர்ணயத்திற்காக அமைக்கப்பட்ட ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையிலான குழு நிர்ணயிக்கும் கல்விக் கட்டணத்தையும் மற்றும் பல்கலைக்கழகங்கள் நடத்தும் பாடப்பிரிவுகளுக்கு அப்பல்கலைக்கழகங்கள் நிர்ணயிக்கும் கட்டணத்தையும் குறிக்கும்.)

...2

(2) 2010–2011–ஆம் கல்வியாண்டு முதல் அரசு நடத்தும் ஒற்றைச்சாளர முறையில் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் சுயநிதி தொழிற்கல்லூரிகளில் பயிலவிருக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த, பட்டதாரிகளே இல்லாத குடும்பத்தைச்சார்ந்த முதல் பட்டதாரி மாணவர்களுக்கே இத்திட்டம் பொருந்தும். ஏற்கனவே முந்தைய ஆண்டுகளில் சேர்க்கை பெற்று பயின்றுவரும் மாணவர்களுக்கு இத்திட்டம் பொருந்தாது.

(3) குடும்ப நபர்கள் என்பது, சம்பந்தப்பட்ட குடும்பத்திலுள்ள தந்தை, தாய், அவர்களின் பெற்றோர் மற்றும் மாணவன் / மாணவியின் உடன்பிறப்புகளைக் குறிக்கும்.

(4) இச்சலுகையினை பெற தங்களது குடும்பத்தில் பட்டதாரிகளே இல்லை என்பதனை உறுதி செய்யும்வகையில் மாணவர் வசிக்கும் பகுதியின் வருவாய்த்துறையின் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் தகுதிக்குக் குறையாத அலுவலரிடம் சான்றிதழ் பெற்று அளிக்க வேண்டும். (சான்றிதழின் மாதிரிப்படிவம் இவ்வாணையின் இணைப்பு I–ல் உள்ளது).

(5) மாணவர்கள் தொழிற்கல்வி சேர்க்கைக்கான விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும்பொழுது விண்ணப்பத்துடன் குடும்பத்தில் முதன் முதலாக பட்டப்படிப்பு படிக்கும் மாணவர் என்ற சான்றிதழையும், உறுதிமொழிப் பத்திரத்தையும் அளிக்க வேண்டும்.

(6) சான்றிதழ்களை சரிபார்ப்பது, தவறான சான்றிதழ்கள் அளிக்கும் மாணவர் மற்றும் பெற்றோர் மீது நடவடிக்கை எடுப்பது மாணவர் எந்தவகையான தொழிற்கல்வி பயில அனுமதிக்கப்பட்டாரோ அதனை அனுமதித்த அலுவலர் / அமைப்புதான் நடவடிக்கை தொடர வேண்டும்.

(7) ஒற்றைச்சாளர கலந்தாய்வில் கலந்துகொண்டு அரசு, அரசு உதவிபெறும், பல்கலைக்கழக கல்லூரிகள் மற்றும் தனியார் சுயநிதி தொழிற்கல்லூரிகளில் சேர்க்கை பெற்ற குடும்பத்தின் முதல் பட்டதாரி மாணவர்களிடமிருந்து கல்விக் கட்டணம் (Tuition fee) வசூலிக்கக் கூடாது என சம்பந்தப்பட்ட அரசு, அரசு உதவிபெறும் கல்லூரி முதல்வர்கள், பல்கலைக்கழக பதிவாளர்கள் மற்றும் தனியார் சுயநிதி தொழிற்கல்வி நிர்வாகங்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும் அம்மாணவர்களுக்கான கல்விக் கட்டணத்தை (Tuition Fee) அக்கல்விநிறுவனம் அரசிடமிருந்து பெற, அக்கல்விநிறுவனம் எந்த துறையின் கீழ் வருகிறதோ, அந்த துறையின் இயக்குநரகத்திற்கு விண்ணப்பம் செய்ய வேண்டும். [(உ.ம்.) பொறியியல் கல்லூரிகள் தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.]

(8) தமது குடும்பத்தில் பட்டதாரி எவரும் இல்லை என மேற்குறிப்பிட்டுள்ள சான்றிதழுடன் மாணவனும் / மாணவியும் அவரது பெற்றோரும் சேர்ந்து கூட்டாக ஒரு உறுதிமொழி அளிக்க வேண்டும். (மாதிரிப் படிவம் இவ்வாணையின் இணைப்பு II–ல் உள்ளது). இந்த உறுதிமொழி சான்றிதழ் தவறானது என்று தெரியவந்தாலும், படிப்பினை முடித்தபின்னர் தெரியவந்தாலும், தவறான தகவல் அளித்ததற்காக மாணவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் மூன்று மடங்காக சம்மந்தப்பட்ட மாணவரிடமிருந்தோ அல்லது அவரது பெற்றோரிடமிருந்தோ வருவாய் வசூல் சட்டத்தின் கீழ் திரும்ப வசூலிக்கப்படும். மேலும் இச்சலுகையினை பெறும் மாணவன் / மாணவியின்

...3

பெற்றோர்களிடம் உறுதி மொழி பெற அதற்கு ஏதுவான உறுதிமொழி வரைவுப் படிவம், வருவாய்த்துறையினரிடம் பெறவேண்டிய சான்றிதழ் படிவம் ஆகியவை தொழிற்கல்விக்கான மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பப் படிவத்துடன் அளிக்கப்படும்.

3. மேலே பத்தி 2–ல் உள்ள திட்டத்திற்கான செலவினம் கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:-

உயர்கல்வித்துறை

2251 00 தலைமைச் செயலகம் – சமூக பணிகள் – 090 தலைமைச் செயலகம் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநிலத் திட்டம் JF முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்கான கல்விக் கட்டணத்தை திருப்பி அளித்தல் 12 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் – 09 ஏனையவை.
(த.தொ.கு. 2251 00 090 JF 1291)

வேளாண்மைத் துறை

2401 00 பயிர் வளர்ப்பு 800 ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – KH முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்கான கல்விக் கட்டணத்தை திருப்பி அளித்தல் – 12 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் – 09 ஏனையவை.
(த.தொ.கு. 2401 00 800 KH 1297)

சட்டத்துறை

2202 பொதுக் கல்வி – 03. பல்கலைக்கழகக் கல்வியும் உயர் கல்வியும் – 107 படிப்புதவித் தொகைகள் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JH. சட்டக் கல்வி பயிலும் முதல் தலைமுறைப்பட்டதாரிகளுக்கான கல்வி கட்டணத்தை திருப்பி அளித்தல் – 12 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் – 09 ஏனையவை.
(த.தொ.கு.2202 03 107 JH 1296)

கால்நடை பராமரிப்புத் துறை

2202 பொதுக்கல்வி 80 பொது – 107 படிப்புதவித் தொகைகள் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JI முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்கான கல்விக் கட்டணத்தை திருப்பி அளித்தல் – கால்நடை மருத்துவ அறிவியல் – 12 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் – 09 ஏனையவை. (த.தொ.கு. 2202 80 107 JI 1291)

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை

2210 மருத்துவமும் பொது சுகாதாரமும் – 05 மருத்துவக் கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி – 105 ஆங்கிலமுறை மருத்துவம் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – KA முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்கான கல்விக் கட்டணத்தை திருப்பி அளித்தல் – 12 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் – 09 ஏனையவை.
(த.தொ.கு. 2210 05 105 KA 1291)

...4

4. இத்திட்டத்தின் கீழ் கல்விக் கட்டண சலுகையினை பெறும் மாணவர்களுக்கான கல்விக் கட்டணத்தை, கல்வி நிறுவனங்களுக்கு அரசின் கணக்கிலிருந்து பெற்று வழங்க, அந்த கல்வி நிறுவனம் எந்த துறையின் கீழ் வருகிறதோ, அந்தந்த துறை தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு. எண் 126/Secy (E)/10/கல்வி–1, நாள் 16.4.2010–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.கணேசன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25.
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை–10.
சட்டக்கல்வி இயக்குநர், சென்னை–35.
வேளாண்துறை இயக்குநர், சென்னை–5.
மீன்வளத்துறை இயக்குநர், சென்னை–18.
பதிவாளர், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை / திருச்சிராப்பள்ளி / கோயம்புத்தூர் / திருநெல்வேலி.
பதிவாளர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை–7.
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.
பதிவாளர், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கார் சட்டப் பல்கலைக்கழகம், சென்னை.28.
பதிவாளர், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், சென்னை.32.
தலைமைச் செயலாளர், சென்னை–9.
முதன்மைச் செயலாளர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளர் மற்றும் வேளாண்மை உற்பத்தி ஆணையர், சென்னை–9.
செயலாளர் (பொ), சட்டத்துறை, சென்னை–9.
செயலாளர், கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளர், வருவாய்த்துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளர், நிதித்துறை, சென்னை–9.
ஆணையர், வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் தணிக்கும் துறை, சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (வட்டாட்சியர்களுக்கு உரிய ஆணைகள் பிறப்பிக்கும் பொருட்டு)
மாநிலக் கணக்காயர், சென்னை–18 / 35.
நகல்
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
உயர்கல்வித்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (கல்வி–1 / வேளாண்மை / உள் II / கால்நடை பராமரிப்பு, மக்கள் நால்வாழ்வு (ம) குடும்பநலம் / வ.செ.) துறை, சென்னை–9.
அனைத்து பொறியியல் கல்லூரிகள் (தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25 வழியாக)
அனைத்து மருத்துவக் கல்லூரிகள் (மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை–10 வழியாக)
அனைத்து சட்டக் கல்லூரிகள் (சட்டக்கல்வி இயக்குநர், சென்னை–35 வழியாக)
அனைத்து வேளாண் கல்லூரிகள் (வேளாண்கல்வி இயக்குநர், கோயம்புத்தூர் வழியாக)
அனைத்து கால்நடை மருத்துவக் கல்லூரிகள் (பதிவாளர், கால்நடை மருத்துவ பல்கலைக்கழகம், சென்னை–7 வழியாக)
இ.கோ. / உதிரிகள்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர். 19/4/10

- 4 DEC 2007
சென்னை-600 006

C56379

சுருக்கம்

கல்லூரிக் கல்வித் துறை – 2007–2008 ஆம் ஆண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இளங்கலை (Under Graduate Courses) பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்கும் திட்டம் – ஆணை வெளியிடப்படுகிறது.

உயர் கல்வி (ஜி1) துறை

கார்த்திகை– 18, சர்வஜித்,
திருவள்ளுவர் ஆண்டு 2038,

அரசாணை (நிலை) எண்.389

நாள். 04–12–2007.

படிக்கப்பட்டவை:-

1. கல்லூரி கல்வி இயக்குநர் கடித எண்.4860/எல்3/2007, நாள். 20–4–2007, 30–4–2007 மற்றும் 22–5–2007.
2. அரசுக் கடித எண் C.D.23(11/2007), பொது (SC) துறை, நாள்.10.11.2007.

....   ....

ஆணை:-

2007–2008ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் உயர்கல்வியினைத் தொடர வழிவகுக்கும் முறையில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளங்கலைப் பட்டப்படிப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் கல்விக் கட்டணம் ரத்து செய்யப்பட்டு, அரசு கல்லூரிகளில் உயர்கல்வி இலவசமாக வழங்கப்படும் எனவும், மேலும், நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின்போது இச்சலுகை அரசு உதவிபெறும் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்படும் எனவும், சட்டமன்றத்தில் அரசு அறிவித்துள்ளது.

2. மேற்கண்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, தமிழகத்திலுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இளங்கலை பட்டப்படிப்பு வரை அனைத்து மாணவர்களுக்கும் இலவசக் கல்வி அளிப்பது தொடர்பான விரிவான கருத்துருவினை மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் கல்லூரி கல்வி இயக்குநர் அரசின் பரிசீலனைக்கு அனுப்பியுள்ளார்.

3. கல்லூரி கல்வி இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமாக ஆய்வு செய்யப்பட்டு, 2007– 2008 ம் கல்வியாண்டு முதல் அரசு / அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பட்டப்படிப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசக் கல்வி அளிக்கும் திட்டத்தினை அமல்படுத்தலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.கணேசன்,
அரசு செயலாளர்,

பெறுநர்

கல்லூரி கல்வி இயக்குநர், சென்னை–6.
மாநில கணக்காயர், சென்னை–18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் 15/79.
நகல் மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை–9
மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித்துறை, சென்னை– 9

06 JUL 2010

சுருக்கம்

உயர் கல்வி – கல்லூரிக் கல்வி 2010–11ம் ஆண்டு முதல் – அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் முதுகலை ( Post Graduate Courses) பட்டப்படிப்பு பயில கல்விக் கட்டணத்தை ரத்து செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (ஜி1) துறை

அரசாணை (நிலை) எண்.180 | நாள்2.7.2010
ஆனி–18,
திருவள்ளுவராண்டு 2041,
படிக்கப்பட்டது.

கல்லூரிக் கல்வி இயக்குநர், கடித எண்.11758/ஜி2/10, நாள் 20.4.2010 & 13.5.2010.

---

ஆணை:

2010–11ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் வரும் கல்வியாண்டிலிருந்து அரசு கல்லூரிகளில் M.A.,M.Sc., போன்ற முதுகலைப் பட்டப்படிப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் கல்விக் கட்டணம் ரத்து செய்யப்படும் என அரசு அறிவித்திருந்தது.

2. மேற்கண்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, தமிழகத்திலுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலை பட்டப்படிப்பு வரை அனைத்து மாணவர்களுக்கும் கல்விக் கட்டணம் ரத்து செய்வது தொடர்பான விரிவான கருத்துருவை மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசின் பரிசீலனைக்கு அனுப்பியுள்ளார்.

3. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமாக ஆய்வு செய்யப்பட்டு, 2010–11ம் கல்வியாண்டு முதல் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலை பட்டப்படிப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் கல்விக் கட்டணத்தை ரத்து செய்யலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அசாஎண்.254/JS(APA)/ 10, நாள்.14.6.2010–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.கணேசன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
கல்லூரிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
மாநில கணக்காயர், சென்னை–18/35.
சம்பளக் கணக்கு அலுவலர். சென்னை–15/79.
உயர்கல்வித் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித்துறை / பிற்படுத்தப்பட்டோர், மிக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை / ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை / சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை. சென்னை–9.
உயர்கல்வித் துறையின் அனைத்துப் பிரிவுகள். சென்னை –9.
இ.கோ. / உ.ந.

// ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது //

அரசு சார்புச் செயலாளர்.